
## திராவிடத்தால் வாழ்கிறோம்

826

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே


**நீரை.மகேந்திரன்**

108

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த குடந்தை இரா.துரை அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# ‘இலட்சியத் தொண்டர், சுயமரியாதை வீரர்!’

# குடந்தை இரா.துரை




**வ**ட்டக் கழகக் கிளைச் செயலாளராகத் தொடங்கி, நகரச் செயலாளராக 35 ஆண்டுகள் பணியாற்றிய கழகத்தின் பெருந்தொண்டர். பேரறிஞர் அண்ணாவின் அன்புத்தம்பி, முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பு உடன்பிறப்பு, கும்பகோணம் இரா.துரை.

ஒருங்கிணைந்த கும்பகோணம் நகரத்தின் செயலாளராக ஏழு முறை தேர்வு செய்யப்பட்டவர். கழகத்தின் முன்னோடிகள் ‘குடந்தை பெரியார்’ கே.கே. நீலமேகம், ‘கலைஞரின் மனசாட்சி’ எனப் போற்றப்பட்ட கோ.சி.மணி ஆகியோரிடத்தில் நெருங்கிய நட்புடன், அவர்களின் காலத்தில் அரசியல் களம் கண்டவர். குடந்தை என்றாலே, கே.கே.நீலமேகத்துக்கு அடுத்து நினைவுக்கு வருவது இரா.துரைதான் என்பார், கலைஞர். குடந்தை கழகத்தினர் ‘மிசா’ துரை என்பார்கள்.

1934-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 6-ஆம் தேதி பிறந்தவர் துரை. கும்பகோணம் நகரத்தின் வடிவாய்க்கால் தெருவைச் சேர்ந்தவர். பெற்றோர் இராமதாசு - மங்களாம்பாள். பள்ளியில் படிக்கும் காலத்திலேயே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் மேடைப் பேச்சுக்களில் ஈர்ப்பு கொண்டு திராவிட இயக்க அரிச்சுவடி பயிலத் தொடங்கினார். கும்பகோணத்தில் பேராசிரியர் உள்ளிட்ட கழக முன்னோடிகள் இயங்கிய திராவிட மாணவர் இயக்கத்தைத் தொடர்புகொண்டு, ‘திராவிட நாடு’, ‘முரசொலி’ ஆகிய இதழ்களை வாசிக்கத் தொடங்கி கொள்கைப் பற்றும் தமிழ் இன உணர்வும் கொண்டவராக பள்ளிக்காலங்களிலேயே இயங்கத் தொடங்கியவர்.

கோ.சி.மணி உள்ளிட்ட தோழமைகளுடன் கிடைத்த தொடர்பு, அன்றைய காலத்தில், அங்கு நிலவிவந்த அடிமைத்தனங்களுக்கு எதிராக, தீவிரமாக களம்காண வேண்டும் என்ற உத்வேகம் ஏற்பட, கழகம் தொடங்கப்பட்ட 1949-ஆம் ஆண்டிலேயே கழகத்தில் உறுப்பினராக இணைத்துக் கொண்டார்.

### விலைவாசி உயர்வுப் போராட்டம்

1950-களில், அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணம் சுற்றுவட்டாரத்தில் கழகத்தின் தீவிர களப்பணியாளராக மூத்தோர்களுடன் இணைந்து பணியாற்றியவர். முழுநேர அரசியல் பணிவாழ்க்கையைத் தேர்வு செய்த துரை, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றுள்ளார்.

1962-ஆம் ஆண்டு, கழகம் அறிவித்த விலைவாசி உயர்வுப் போராட்டம், அன்றைய தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தை மையமாகக் கொண்டுதான் வீச்சாக இயங்கியது. கோ.சி.மணி அவர்கள், விலைவாசிப் போராட்டத்தின் முன்னணி தளபதியாக விளங்கினார். அவரோடு சேர்ந்து, நெல் கடத்தலைத் தடுக்கும் போர்க்குணம் கொண்ட இளைஞராக துரை, கும்பகோணம், மாயவரம், கீழ்தஞ்சைப் பகுதிகளில் கழகத்தினரால் அடையாளம் காணப்பட்டார். விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டபோது, இவருக்கு மூன்று மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

கலைஞரின் நெருக்கத்துக்குரிய துரை அவர்களின் மணவிழா, 1965-ஆம் ஆண்டில், கும்பகோணம் நகரத்தில் மிகப் பெரிய அரசியல் மாநாடு போல நடைபெற்றுள்ளது. கலைஞர், பேராசிரியர், நாவலர் உள்ளிட்ட பல தலைவர்களும் கலந்துகொண்ட நிகழ்வாக அது இருந்தது.

### அடித்தளத்திலிருந்து அதிகாரம் நோக்கி...

கும்பகோணம் 16-வது வட்டக் கிளையில் தொடங்கியது அவரது அரசியல் பயணம். பின்னர், 20-வது வட்டக் கழகச் செயலாளர், கும்பகோணம் நகரக் கழகப் பொருளாளர் எனப் படிப்படியாக வளர்ந்து, 1972-ஆம் ஆண்டில் நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றார். அப்போது முதல் 35 ஆண்டுகளுக்கும் மேலாக நகரக் கழகச் செயலாளராக ஏழு முறை தேர்வு செய்யப்பட்டவர் துரை. ‘கும்பகோணம் நகரக் கழகத்தைக் கட்டுக்கோப்போடுகழகத்தின்கற்கோட்டையாக கட்டி எழுப்பியவர்களில் ஒருவர் துரை’என கலைஞர் மேடைகளில் புகழ்ந்துள்ளார்.

> **முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்டவர், ஓராண்டு காலம் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.**

1971 -ஆம் ஆண்டில் நகர்மன்ற உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும், பொறுப்புத் தலைவராகவும் பின்னர் தலைவராகவும் 35 ஆண்டுகளுக்கு மேல் நகரமன்றத்தில் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். ‘கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி நிறுவனத்தில் இயக்குநராகப் பொறுப்பு வகித்த காலத்தில், ஏராளமான விவசாய நல உதவிகளைக் கொண்டு சேர்க்க முனைப்புக் காட்டியவர் துரை’ என்கிறனர் மக்கள்.

குடந்தையில் கழகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் தேவையெனக் கருதிய, கே.கே.நீலமேகம் மற்றும் கழக நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்றி, கழகக் கட்டடம் உருவானதில் அவருடைய பங்கு குறிப்பிடத் தக்கது. குடந்தையில் கழகத் தோழர்களுக்கோ கழகக் குடும்பங்களுக்கோ அவசரத் தேவைகள், இன்னல் இடையூறுகள் என்றால், அவற்றைத் தன் சொந்தப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு, தன்னால் முடிந்த அளவு விரைந்து உதவிகள் செய்வார் எனக் கூறுகின்றனர் நகரக் கழகத்தினர்.

கழகத் தோழர்களுடன் அவர் காட்டும் கனிவு மற்றும் தோழமை காரணமாக, அவரைச் சுற்றி எப்போதும் தொண்டர்கள் இருப்பார்கள் என நினைவுகளைப் பகிர்கின்றனர்.

உள்ளாட்சித் துறை அமைச்சராக கோ.சி.மணி அவர்கள் இருந்தபோது, கும்பகோணம் நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிட, அவர் எடுத்த நடவடிக்கைகளுக்கு, பக்கபலமாக நின்று செயல்பட்டவர் துரை.

### மிசாவில் ஓராண்டு

1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டபோது, முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்டவர், ஓராண்டு காலம் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறைவாசம் முடித்து வெளியே வந்தபோது, நகரக் கழகத்தினர் மிகப் பெரிய வரவேற்பு அளித்து, அன்று முதல் அவரை ‘மிசா’ துரை என்கிற பெரும் பெயரைச் சூட்டி அழைக்கத் தொடங்கினர்.

அந்தப் பெரும் பெயருக்கான பரிசாக 1977-ஆம் ஆண்டில் கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுவதற்கான வாய்ப்பினை அளித்தார் கலைஞர். ஆனால், அன்றைக்கு நிலவிய அரசியல் சூழலில் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார் துரை.

அந்தத் தேர்தலில் தனது வெற்றியை தலைவர் அவர்களிடம் ஒப்படைக்க முடியவில்லையே என வருந்தியவரை, அழைத்து ஆறுதல் சொன்னார் கலைஞர்.

தனது ஆற்றல்மிகு செயல்களால், கும்பகோணம் நகரக் கழகத்தின் அடையாளமாகத் திகழ்ந்த துரை அவர்களுக்கு, 2007-ஆம் ஆண்டில் கழகத்தின் முப்பெரும் விருதில், கலைஞர் விருதினை அறிவித்து, ஈரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அளித்து மகிழ்ந்தார் கலைஞர். தொடர்ந்து உடல்நலம் குன்றிய நிலையிலும் இயங்கி வந்த அவர், 2010-ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ஆம் தேதி இயற்கை எய்தினார். கும்பகோணத்தில் அவர் நினைவாக தஞ்சை மாவட்ட, குடந்தை நகர தி.மு.க., சார்பில் அவருக்கு நினைவகம் எழுப்பப்பட்டு, ஆண்டுதோறும் அவர் நினைவினைப் போற்றுகின்றனர் கழகத்தினர். அவரது படத்திறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட, அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் ‘சுயமரியாதை வீரராக லட்சியத் தொண்டராக வாழ்ந்தவர்’ எனப் புகழாரம் செய்தார். லட்சிய வீரர்களால் உருவான இயக்கம், என்றும் மக்கள் பணியாற்றும்.

...துடிக்கும்

## கலைஞரின் சிந்தனைகளில் பாலின சமத்துவம்!




**க**ருஞ்சட்டைக் கலைஞர், நீலச்சட்டைக் கலைஞர், கலைஞரின் சொல்லோவியம் என முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து, எண்ணற்ற நூல்கள் வெளியாகியிருந்தாலும், இன்னும் வெளிவர வேண்டிய உள்ளடக்கங்கள் கொண்ட நூல்கள், அவரின் அர்ப்பணிப்புமிக்க ஆயிரமாயிரம் பணிகள், சாதனைகளுக்குள் ஒளிந்திருக்கின்றன. அவற்றில் ஒன்றைத் தேடியெடுத்து, ‘கலைஞரின் சிந்தனைகளில் பாலினச் சமத்துவம்’ என்ற நூலாகத் தந்திருக்கிறார் பேராசிரியர் முனைவர். அரங்கமல்லிகா.

கலைஞரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள், மொழியும் பெண்களும், பெண்களுக்கான சொத்துரிமை, கருவறைக்குள் பெண்ணுரிமை, மகளிர் சுய உதவிக் குழுக்கள், பெண்கள் நலனுக்கான நிதி ஒதுக்கீடு, பெண்களிலும் ஒடுக்கப்பட்ட பட்டியல்-பழங்குடி சமூகப் பெண்களின் நலன் என மிக நுணுக்கமானத் தரவுகளை தேடிக்கோர்த்து 10 துணைத் தலைப்புகளில் இந்நூல் மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கலைஞரின் பல்வேறு படைப்புகள், சட்டங்கள், அரசாணைகள், அரசியல் நெறிகளை ஆராய்ந்து, அவற்றைப் புரட்சியாளர் அம்பேத்கரின் சமூக நீதிச் சிந்தனைகளோடு ஒப்பிட்டு இந்நூலை எழுதியுள்ளார் நூலாசிரியர். மேலும், திராவிட மாடல் அரசால் 2021-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ‘தமிழ்நாடு பெண்களுக்கான புதிய வரைவுக்கொள்கை’ குறித்தும், இந்நூல் அலசுகிறது. வேலைவாய்ப்பில் பாலின இடைவெளியைப் போக்குதல், விவசாயம் செய்யப்படாத நிலங்களைக் குத்தகை அல்லது விற்பனை செய்வதில், மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை தருவது, பாலின வன்முறை தொடர்பான வழக்குகளை விரைவாக கண்காணிக்க அரசின் உறுதி உள்ளிட்ட பல முக்கிய அம்சங்கள் இந்த வரைவறிக்கையில் இடம்பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டுகிறார் நூலாசிரியர்.

புலம் வெளியீடாக வந்துள்ள இந்நூலின் விலை ரூ.200
நூலைப் பெற: 98406-03092, pulam2017@gmail.com.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருடன் ஓர் இயல்பான உரையாடல்!



பா.நூருல்லாஹ்

**ம**துரை, மீனாம்பாள்புரத்தில் என் தந்தை பாஷா, முஸ்லிம் ஜமாத் தலைவர். அப்பகுதியில், எல்லோரும் அறிந்த முகம். திராவிட இயக்கத்தின் மீதும், கலைஞர் மீதும் மாறாப் பற்றுடன் இயக்கத்தில் பயணித்துக் கொண்டிருப்பவர். 2009-ஆம் ஆண்டு மதுரை, திருமங்கலம் பொதுத்தேர்தலின் போது பிரச்சாரத்திற்காக, அன்றைய துணை முதலமைச்சரும், இன்றைய முதலமைச்சருமான கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்தபோது, அவரைச் சந்தித்து, என் தந்தை உரையாடிய தருணத்தில் எடுக்கப்பட்ட படம்.

– பா.நூருல்லாஹ்,
முதுகலைத் தமிழாசிரியர், மதுரை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தலைமைக் கழக அலுவலகம்!

**க**ழகம் தொடங்கப்பட்ட காலத்தில், கழகத்துக்கு என கட்டடம் இல்லை. இதனால் கழகப் பணிகளைக் கவனிப்பதற்காக சென்னை, தங்க சாலை எண்: 202 கொண்ட வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டது. 1950-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 27-ஆம் தேதி முதல், தலைமைக் கழகத்தின் பணிகள் அந்த வீட்டிலிருந்து தொடங்கப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.